**பிப்ரவரி – 13**

# TNPSC துளிகள்

- மின்னணு வர்த்தகச் சந்தையில் நியாயமான மற்றும் போட்டிச் சூழ்நிலையை இயலச் செய்திடும் வகையில் அரசு மின்னணுச் சந்தை அமைப்பும் (Government e Marketplace - GeM) இந்தியப் போட்டி ஆணையமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- கேரள உயர் நீதிமன்றம், வங்கி வாடிக்கையாளர்களின் சேமிப்புக் கணக்கிலிருந்து அவர்கள் ஒப்புதல் அளிக்காமல் மேற்கொள்ளப்பட்ட பணமெடுப்புகளின் காரணமாக வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட நட்டத்திற்கான பொறுப்பிலிருந்து வங்கிகள் தம்மை விடுவித்துக் கொள்ள முடியாது என்று தீர்ப்பளித்திருக்கின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கி 2 கோடி ரூபாய்க்கு அதிகமாக வைப்புகளை மிகப் பெரியத் தொகை என்று வரையறுக்க முடிவு செய்துள்ளது. இது முந்தைய 1 கோடி ரூபாயிலிருந்த வரம்பை இரட்டிப்பாக்கியுள்ளது. இந்த நடவடிக்கை வங்கிகளின் செயல்பாட்டுச் சுதந்திரத்தை அதிகப்படுத்தும்.
- கராச்சியின் பாகிஸ்தான் கடற்படை கப்பல் கட்டும் தளத்தில் "அமைதிக்காக ஒன்றுபடுதல்" என்ற கருத்துருவுடன் உலகம் முழுவதிலும் இருந்து 46 நாடுகள் பங்குபெறும் 5 நாட்கள் நடைபெறுகின்ற பன்னாட்டு கடற்படைப் பயிற்சியான "அமான்-19" பயிற்சி முறைப்படி துவக்கி வைக்கப்பட்டது.
    - இந்த பயிற்சி ஒருவருக்கொருவர் மற்ற நாடுகளின் கடற்பயணமுறை மற்றும் செயல்பாட்டு நடைமுறைகளை அறிந்து கொள்வதற்கான மன்றத்தை ஏற்படுத்தவும் கடலில் பொதுவான ஆபத்துகளை எதிர்கொள்வதில் இருக்கும் செயல்முறைகள் மற்றும் வழிமுறைகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.
- வெளிநாட்டுப் பணியாளர்கள் நீதியை அணுகுவதை மேம்படுத்தும் நோக்கில் அபுதாபி நீதிமன்ற அமைப்பில் இந்தி மூன்றாவது அலுவல்பூர்வ மொழியாக சேர்க்கப்பட்டிருக்கின்றது.
    - மேலும் மக்கள் நீதிமன்ற நடைமுறைகளைப் புரிந்து கொள்வதற்கு உதவிட அதிகாரிகள் சிக்கலான சட்டமொழி வழக்குகளை விளக்குவதற்கான ஒரு முயற்சியில் இருமொழி கையேட்டுக் குறிப்புகளையும் உருவாக்கியிருக்கின்றனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## பிரதமரின் தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணம்

- சென்னை மெட்ரோ ரயிலின் ஊதாப் பட்டையின் கடைசிப் பகுதியையும், தரையின் அடியில் இயங்கும் ஆறு மெட்ரோ ரயில் நிலையங்களையும் திருப்பூரிலிருந்து காணொளித் தொலைக்காட்சி மூலம் பிரதமர் துவக்கி வைத்தார்.
- அவர் கீழ்க்காணும் வசதிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.
    - சென்னை சர்வதேச விமான நிலையத்தின் நவீனமயமாக்கல் (பகுதி - III)

- திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் புதிய ஒருங்கிணைக்கப்பட்ட நுழைவாயில் கட்டிடம்
- திருப்பூரில் 100 படுக்கை வசதிகள் கொண்ட தொழிலாளர் காப்பீட்டு மருத்துவமனை.

❖ மேலும் அவர் பிபிசிஎல் எண்ணூர் கடற்கரை நிலையக் கட்டமைப்பையும் முழுமையாக தானியங்கி வசதி செய்யப்பட்ட எண்ணெய்க் கிடங்கையும் அதன் விநியோக வசதிகளையும் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

# தேசியச் செய்திகள்

## ரகாத் பயிற்சி

❖ பிப்ரவரி 11-12 தேதிகளில் ராஜஸ்தானில் ஜெய்ப்பூர், கோட்டா ஆல்வார் ஆகிய பகுதிகளில் பேரிடர் நிவாரணப் பயிற்சி பரிசோதிக்கப் பட்டது.

❖ இந்திய ராணுவத்தின் சார்பாக, ஜெய்ப்பூரைச் சேர்ந்த சப்த சக்தி பிரிவு ஒரு மனிதாபிமான கூட்டு உதவிப் பயிற்சியையும், பேரிடர் நிவாரணப் பயிற்சியையும் நடத்தியது.

❖ இப்பயிற்சி தேசியப் பேரிடர் மேலாண்மை அமைப்பின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

❖ இந்தக் கூட்டுப் பயிற்சி பின்வருபவர்களின் பங்களிப்பைக் கொண்டிருக்கும்.

- ✓ ஆயுதப் படைகள்
- ✓ தேசியப் பேரிடர் மேலாண்மை பதிலெதிர்ப்பு முறை
- ✓ ராஜஸ்தான் மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம்.

❖ சமமட்ட இருக்கைப் பயிற்சி என்ற வடிவத்தில் ஜெய்ப்பூரில் ஆரம்பித்து கோட்டா மற்றும் ஆல்வாரைத் தொடும் வண்ணம் இந்தப் பயிற்சி மூன்று இடங்களிலும் ஒரே நேரத்தில் நடத்தப்படும்.

## வாக்காளர் சரிபார்ப்பு மற்றும் தகவல் திட்டம்

❖ அடுத்து வரவிருக்கும் 2019 பொதுத் தேர்தலையொட்டி குடிமக்கள் தங்கள் பெயர், தங்கள் பதிவுகள், தங்கள் வாக்காளர் விவரங்களில் மாற்றங்கள் மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகளில் திருத்தங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் சரிபார்ப்பு மற்றும் தகவல் திட்டம் என்பதை ஆரம்பித்திருக்கின்றது.

❖ மேலும் தேர்தல் ஆணையம் வாக்காளர் உதவி மைய எண்ணாக 1950 என்ற வசதியுடன் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களில் தொடர்பு மையங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த தகவல் மையங்கள் அழைப்பாளர்களுக்கு உதவிடும் வகையில் சமீபத்திய தகவல் மற்றும் தொலைத் தொடர்பு உள்கட்டமைப்பைக் கொண்டிருக்கும்.




- மாற்றுத் திறனாளிகள் புதிய பதிவு, முகவரியில் மாற்றம், விவரங்களில் மாற்றம் மற்றும் தங்களை மாற்றுத் திறனாளிகள் என்று குறிப்பிடுவது ஆகியவற்றை கைபேசி செயலியின் மூலம் செய்வதற்கு வசதியாக PWD செயலி என்ற செயலியும் வெளியிடப்பட்டது.

## அரசியலமைப்பு (125வது மசோதா)

- வடகிழக்குப் பகுதியின் ஆறாவது பட்டியலில் உள்ள 10 தன்னாட்சி மன்றப் பகுதிகளின் நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களை அதிகப்படுத்திட வேண்டி அரசியலமைப்பு [125வது திருத்தம்] மசோதா ஒன்றை அரசு மாநிலங்களவையில் அறிமுகம் செய்திருக்கின்றது.
- இந்த திருத்தம் அசாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் ஒரு கோடி பழங்குடி மக்களுக்கு உதவிடும்.
- இந்த முன்மொழியப்பட்ட திருத்தங்கள் கடைமட்ட நிலையில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உள்ளாட்சி மன்றங்களை ஏற்படுத்தும்.
- இந்த கிராம மன்றங்கள் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதி ஆகியவற்றுக்கான திட்டங்களைத் தயாரித்திடும் வகையில் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும்.
- நிதிக் குழு அவர்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பகிர்ந்திடுவது தொடர்பாக பரிந்துரைக்க அதிகாரமளிக்கப்பட்டிருக்கும்.
- தன்னாட்சி மன்றங்கள் தற்போது, குறிப்பிட்ட திட்டங்களுக்காக மத்திய அமைச்சகங்களிடமிருந்து வரும் மானியங்களையும் மாநில அரசின் நிதிகளையும் நம்பியிருக்கின்றது.
- இந்த திருத்தத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டால் அது ஆறாவது பட்டியல் பகுதிகளான அசாம், மிசோரம், மேகாலயா மற்றும் திரிபுரா பகுதிகளில் உள்ள கிராம மற்றும் நகராட்சி மன்றங்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு இடங்களை பெண்களுக்கு என்று ஒதுக்கும்.

### *ஆறாவது பட்டியல்*

- அரசியலமைப்பின் ஆறாவது பட்டியல் நான்கு வடகிழக்கு மாநிலங்களான அசாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகிய பகுதிகளில் உள்ள பழங்குடியினரின்

நிர்வாகத்தோடு தொடர்புடையதாகும்.

## மருத்துவத் தாவர வகை உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு

- இந்திய தாவரவியல் ஆய்வு நிறுவனத்தின் தகவலின் படி, இந்தியாவில் 8000க்கும் மேற்பட்ட மருத்துவத் தாவர வகை உயிரினங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழுள்ள தேசிய மருத்துவ வகைத் தாவரங்கள் மன்றம், நாடு முழுவதும் மருத்துவ வகைத் தாவரங்களைப் பயிரிடுதல், பாதுகாத்தல், செயல்முறைப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக பின்வரும் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.
    - ✓ மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டமான தேசிய ஆயுஷ் திட்டம்
    - ✓ மருத்துவக் குணமுள்ள தாவரங்களின் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் நீடித்த மேலாண்மை என்பதன் மீது மத்தியத் துறைத் திட்டம்.
    - ✓ மருத்துவக் குணமுடைய தாவரங்களின் உற்பத்திக்கான விருப்ப சான்றளிப்புத் திட்டம்

# பொருளாதாரச் செய்திகள்

## முன்னுரிமைகளுக்கான பொதுமைப் படுத்தப்பட்ட அமைப்பு - இந்தியா

- மிகப் பெரிய பொருளாதாரங்களுடனான அமெரிக்கப் பற்றாக்குறையை குறைக்கும் நோக்கில் அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவை முன்னுரிமைகளுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட அமைப்பிலிருந்து (The Generalized System of Preferences - GSP) விலக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றார்.
- 1970களில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கும் இத்திட்டத்தில் உலகின் மிகப்பெரிய பயனாளி இந்தியாவாகும்.
- வர்த்தக உறவுகளில் சமீபத்திய சரிவிற்கான முக்கிய தூண்டுதல் மிகவேகமாக வளர்ந்துக் கொண்டிருக்கும் இணையதளச் சந்தை வர்த்தகத்தைக் கட்டுப்படுத்திடும் இந்தியாவின் புதிய மின்னணு வர்த்தக விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதே ஆகும்.
- இதன் மூலம் இந்தியா ஒரு முக்கிய அமெரிக்க வர்த்தகச் சலுகையை இழக்க நேரிடும். இந்தச் சலுகையின் மூலம் இந்தியா அமெரிக்காவிற்குச் செய்யும் ஏற்றுமதியில் 5.6 மில்லியன் டாலர்கள் மதிப்பிற்கு ஜீரோ கட்டணங்களை அனுபவிக்கின்றது.

### *முன்னுரிமைகளுக்கான பொதுமைப் படுத்தப்பட்ட அமைப்பு*

- வளரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அடையாளம் காணப்பட்ட 129 பயனாளி நாடுகள் மற்றும் நிலப்பரப்புகளிலிருந்து 4800 பொருட்களுக்கு வரிகள் ஏதுமின்றி முன்னுரிமை நுழைவு அனுமதியை அளித்திடும் ஒரு அமெரிக்க வர்த்தகத் திட்டமே இதுவாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## திட எரிபொருள் குழாய் கொண்ட ராம்ஜெட்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் ஒடிசாவில் இரண்டாவதாக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட திட எரிபொருள் குழாய் கொண்ட ராம்ஜெட் (Solid Fuel Ducted Ramjet - SFDR) உந்துவிசை அடிப்படையில் அமைந்த ஏவுகணை அமைப்பு வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது.
- புரொபெல்லன்ட் மற்றும் ஆக்சிடைஸ்சர்கள் ஆகியவற்றைக் கொண்டுச் செல்லும் வழக்கமான ராக்கெட்டுகளைப் போலல்லாது ராம்ஜெட் ஆனது ஒரு ஜெட் இயந்திரத்தைப் போல காற்றை ஒரு ஆக்சிடைசராக உபயோகிக்கிறது. எனவே இதன் மூலம் தேவைப்படும் எரிபொருளின் எடை வெளியேற்றப்படுகின்றது.
- இதன் மூலம் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து முழுமையான பாதுகாப்பு வசதியினை அளிப்பது மற்றும் பல அடுக்கு ஆகாயப் பாதுகாப்பு கொண்டது என்ற இரண்டு பிரிவுகளில் வேகமான நீண்ட தூரம் செல்கின்ற ஏவுகணைகளை இந்தியா கொண்டிருக்க முடியும்.
- வழக்கமான ஏவுகணைகளின் செயல்பாடுகளில் சமரசம் செய்திடும் வகையில் சமாளிக்கக் கூடிய இலக்குகளுக்கு எதிராக அடுத்த தலைமுறை ஏவுகணைத் தொழில் நுடபத்தைப் பயன்படுத்தும் நாடுகளின் அணியில் இந்தியாவின் சேர்க்கையை ஏவுகணைகளில் ராம்ஜெட்டின் வெற்றிகரமான பயன்பாடு குறிப்பிடும்.
- இந்தோ-ரஷ்யா கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட ராம்ஜெட் இயந்திரத்தின் முதல் பறக்கும் சோதனை 2018ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- அஸ்திராவின் மேம்படுத்தப்பட்ட பதிப்பு போன்ற பல்வேறு ஏவுகணைகளில் இந்தியாவின் இந்த அமைப்பு பயன்படுத்தப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## திருக்குறளின் போர்வாள் விருது

- தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் பெருமையைப் போற்றும் வகையில் செயல்பட்டமைக்காக, சுதந்திரத்திற்குப் பிறகான முதல் வட இந்தியர் என்ற வகையில், உத்தரகாண்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இந்தி பேசும் நபருமாகிய தருண் விஜய் திருக்குறளின் போர்வாள் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபராகியுள்ளார்




- இந்த விருது இந்தியா மற்றும் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் திருவள்ளுவரின் சிறந்த பாரம்பரியமிக்க போதனைகள் மற்றும் செய்திகளைப் பரப்பும் மிகச் சிறந்த பிரபலங்களுக்கு வழங்கப்படுகின்றது.

# முக்கிய தினங்கள்

## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13

- பிப்ரவரி 13ம் தேதியன்று ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ (The United Nations Educational, Scientific and Cultural Organization - UNESCO) உலக வானொலி தினத்தைக் கொண்டியது.
- இந்த வருடத்திற்கான கருத்துரு - பேச்சு வார்த்தை, சகிப்புத் தன்மை மற்றும் அமைதி என்பதாகும்.



- 1946ம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் வானொலி நிறுவப் பட்டதை பிப்ரவரி 13ம் தேதி குறிக்கின்றது.

- - - - - - - - - - - - - - -